பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

கடீர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 02 செவ்வாய்க்கிழமை (19-09-1995) UTHAYAN A Lively National Tamil Daily சுதிர் 299

# புலிகளின் பீரங்கிகளை கண்டறிய "ராடர்" கருவி கோருகின்றது படை!

## பலாலியைப் பாதுகாக்க முடியாது திணறல்

கொழும்பு, செப்ரெம்பர் 19

பலாலி மீது விடுதலைப் புலிகள் நடத்தும் பீரங்கித் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் ஸ்ரீலங்காப் படைகள் திணறுகின்றன. அதனைத் தொடர்ந்து புலிகளின் பீரங்கிப்பலம் மற்றும் கடற்படைப்பலம் ஆகியவற்றைக்கண்டறிந்து தாக்குதல் நடத்துவதற்கு வசதியாக "ராடர்" கருவிகளைத் தமக்கு உடன் தந்துதவுமாறு அரசுக்கு அவசர கோரிக்கை விடுத்துள்ளன.

விடுதலைப் புலிகள் தமது பீரங்கிப் படைகளை அடிக்கடி இடம்மாற்றித் தாக்குதல்களை நடத்தி வருவதால் அவற்றைத் தேடிக் கண்டறிந்து தாக்கி அழிப்பது ஸ்ரீலங்காப் படைகளுக்கு இயலாத காரியமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

எனவே புலிகளின் பீரங்கிப் படைப் பலத்தை அறிந்து கொள்ள வசதியாக 'ராடர்' எனப்படும் தொலைநிலை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## 'ஐரிஷ்மோனா' பயணிகளில் 45பேர் இன்று தீவகத்திற்கு!

யாழ்ப்பாணம், செப். 19

"ஐரிஷ்மோனா" கப்பலில் வந்த பயணிகளில் எஞ்சியுள்ள 87 பேர் இரு தொகுதிகளாக தமது சொந்த இடங்களுக்கு — தீவுப்பகுதிக்கு — இன்று முதல் திரும்பவிருக்கின்றனர்.

அவர்களில் முதல் தொகுதி பயணிகள் 45 பேர் பருத்தித்துறையில் வைத்து விடுதலைப் புலிகளால் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடம் இன்று காலை ஒப்படைக்கப்படுவர்.

பின்னர் அந்தப் பயணிகள் 45 பேரும் 'ஹபரண' கப்பல் மூலம் தீவுப்பகுதிக்கு கூட்டிச் செல்லப்படுவர். (உ-4)

## அமைச்சரவை மாற்றம் விரைவில் வரும்?

விரைவில் அமைச்சரவை மாற்றம் ஒன்று இடம்பெறவிருப்பதாக அதிகாரபூர்வ வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

ஐந்து அமைச்சுகளில் மாற்றம் வரும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

செய்தியாளர்களுக்கு சார்பாக குரல் எழுப்பி வருகின்றார் என்றும் பத்திரிகையாளர் பக்கம் சாய்ந்து நடக்கின்றார் என்றும் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் தர்மசிறி சேனநாயக்காவிடமிருந்து வெகுஜன தொடர்பு சாதன அமைச்சு பறிக்கப்பட்டு, அந்த அமைச்சு ஜனாதிபதிக்கு தற்போது மிக நெருக்கமாகச் செயற்படும் மங்கள சமரவீரவுக்கு வழங்கப்படும் என்று கருதப்படுகின்றது.

பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே புதிய புடவைக் கைத்தொழில் அமைச்சராக நியமிக்கப்படுவார் எனவும் —

அமைச்சர் ரத்னசிறிவிக்ரமநாயக்கவின் கீழ் வரும் சில அமைச்சுகள் பிறருக்கு மாற்றப்படும் எனவும் அறியவருகிறது. [உ-க]

## விமான சிதைவுகளைத் தேடி எடுக்க சிங்கப்பூரிலிருந்து இரு நீர்மூழ்கிகள்!

கடலில் மூழ்கியுள்ள "அன்ரனோவ்" விமானத்தின் சிதைவுகளைத் தேடி மீட்கும் நடவடிக்கைக்கு உதவுவதற்காக சிங்கப்பூர் தனியார் நிறுவனம் ஒன்று விசேட அவதானிப்பு நீர்மூழ்கிக் கப்பல்கள் இரண்டு உட்பட வேறு பல நவீன சாதனங்களை ஸ்ரீலங்காவுக்கு வழங்க முன்வந்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

தேடுதல் நடவடிக்கைக்கு உதவ இந்திய விமானப்படையும் முன்வந்துள்ளது.

தாம் எந்த வகையில் உதவி வழங்க முடியும் என்பதை அறியத்தருமாறு இந்திய விமானப்படை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தைக் கேட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட விமானத்தைத் தயாரித்த உக்ரேயின் நாட்டு நிறுவனமும்

கடலில் விழ்ந்த விமானம் குறித்து மேலும் செய்திகள் 2,5ம் பக்கங்களில்

நான்கு நிபுணர்களை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்துள்ளது.

சிங்கப்பூர் நிறுவனம் அனுப்பும் விசேட

[5 ஆம் பக்கம் பார்க்க]

## குடாநாட்டில் பெரும் தாக்குதலுக்கு 35,000 படையினர் தயார் நிலையில்!

கொழும்பு, செப். 19

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீதான பாரிய தாக்குதலை நடத்துவதற்காக பலாலி முகாமில் 35,000 துருப்புக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக—

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்றுத் தெரிவித்தது.

பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கைக்குத் தேவையான ஆயுதங்களும் வந்து சேர்ந்து விட்டதாகவும்—

சீனாவிடமிருந்து கடற்படை கொள்வனவு செய்துள்ள மூன்று பீரங்கிப் படகுகளும் கடந்த வாரம் இங்கு வந்து சேர்ந்து விட்டதாகவும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டின் மீதான தாக்குதலுக்கான ஆயத்த ஒழுங்குகளின் ஒரு பகுதியாக மட்டக்களப்பில் உள்ள இராணுவத்தினர் பலாலிக்கு அனுப்பப்பட்டு —

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வெளியூர் தபால்களை சேர்க்குக!

யாழ்ப்பாணம், செப். 19

நாளை புதன்கிழமை பருத்தித்துறையில் இருந்து புறப்படவுள்ள "ஹபரண" கப்பலில் வெளியூர் தபால் பொதிகளை எடுத்துச்செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகையால் வெளியூர்களுக்கு இன்று கடிதங்களை அனுப்ப விருப்போரை, மாலை 4 மணிக்கு முன்னதாக யாழ். பிரதம தபாலகத்தில் இருக்கும் தபால் பெட்டியில் அவற்றைச் சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் கோரியுள்ளார். (அ-4)

## தொண்டு நிறுவனங்களின் 14 பிரதிநிதிகள் வந்தனர்

யாழ்ப்பாணம், செப். 19

நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்த "ஹபறண" கப்பலில் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் 14 பிரதிநிதிகளும் வந்து சேர்ந்தனர்.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் (யுனிசெவ்) பிரதிநிதியான திருமதி பிறீற்றா ஒஸ்றபேக் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தைச் சேர்ந்த பெனாட் டொயில் பயியோ வறோலி ஆகியோர் உட்பட றெட்பானா, ஐக்கிய ராஜ்ஜியத்தின் சிறுவர் பாதுகாப்பு நிதியம். செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு, பிரெஞ் மருத்துவக்குழு போன்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளே நேற்று வந்து

[5 ஆம் பக்கம் பார்க்க]

## மக்கள் ஆர்வத்துடன் தியாகி திலீபனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 19

தியாகி திலீபனின் எட்டாவது ஆண்டு நினைவு நிகழ்வுகளின் நான்காம் நாளான நேற்று அஞ்சலி நிகழ்வுகளில் மக்கள் மிகப் பெரும் எண்ணிக்கையில் உணர்வு பூர்வமாகப் பங்குபற்றினர்.

கோட்ட மட்டத்தில் அமைக்கப்பட்ட பிரதான பந்தல்களில் இடம்பெற்ற உண்ணாவிரதத்தில் மக்கள் எழுச்சியுடனும் ஆர்வத்துடனும் கலந்து கொண்டனர்.

தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் தியாகி திலீபன் நினைவு நிகழ்வுகள் நாளுக்கு நாள் களைகட்டி வருவதாக எமது செய்தியாளர்கள் அறிவிக்கிறார்கள்.

வடமராட்சிப் பகுதியில்

(5 ஆம் பக்கம் பார்க்க)

எமது உரிமைகளை நாமே வென்றெடுக்க வேண்டும்
இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்கக் கூடாது.

— தியாகி திலீபன் —

தமிழர் கல்வி [illegible] ஒன்றியம்

(சி/2274)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# விமானத்தில் சிகரெட் பெட்டிகள் ஏற்றப்பட்ட விடயத்தில் பெரும் மர்மம்!

இரத்மலானை, செப். 19

''அன்ரனோவ்'' விமானம் மர்மமாக விழுந்து சிதறியதை விசாரணை செய்துவரும் இரகசியப் பொலிஸார் யாழ்ப்பாணத்தில் உள்ள பொலிஸாருக்கு என அனுப்பப்பட்ட சிகரெட் பெட்டிகள் ஏன் இரத்மலானையில் வைத்து ஏற்றப்பட்டன என்பதைத் துருவி விசாரிக்கின்றார்கள் என்று தெரியவருகிறது.

இது சம்பந்தமாக சிரேஷ்ட தமிழ்ப் பொலிஸ் அதிகாரி ஒருவரும் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்.

வடபகுதி படையினருக்கான சிகரெட்டுகள் வழக்கமாக அநுராதபுரத்தில் வைத்தே விமானத்தில் ஏற்றப்படும். ஆனால் விந்தையான முறையில் இத்தடவை அவை இரத்மலானை விமான நிலையத்தில் வைத்து ஏற்றப்பட்டுள்ளன என சி.ஐ.டியினர் கூறியுள்ளனர்.

பூர்வாங்க விசாரணைகளின்படி பொலிஸ் சேமநலப் பகுதி வடக்கிற்கு அனுப்புவதற்கான சிகரெட்டுகளை செப்ரெம்பர் 4 ஆம் திகதி கையளித்தது.

ஒரு கனிஷ்ட பொலிஸ் அதிகாரி இந்த சிகரெட்டுகளை வவுனியாவுக்கு எடுத்துச் சென்றார். ஆனால் மர்மமான ஏதோ ஒரு காரணத்தால் அவற்றை அங்கிருந்து மீண்டும் கொட்டாஞ்சேனையில் உள்ள தனது வீட்டுக்குத் திருப்பி எடுத்து வந்தார். இரவில் தூங்குவதற்கு முன் வானில் சிகரெட்டைப் பூட்டி வைத்தார்.

அடுத்த நாள் அவர் கொழும்பில் உள்ள தனது சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் வீட்டுக்கு அவற்றை எடுத்துச் சென்றுள்ளார். உறவினர்கள் சிலர் தன்னைப் பார்க்க வருவதால் தான் அன்று யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்யவில்லை என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அவரிடம் கூறினார்.

அதன் பின்னர் கனிஷ்ட பொலிஸ் அதிகாரி இரத்மலானை விமான நிலையத்துக்கு சிகரெட்டுகளை அனுப்பினார். அவை அங்கு விமானத்தில் ஏற்றப்பட்டன.

சிகரெட்டுகளை ஏற்றிய இரண்டு பொலிஸார் பொலிஸ் விடுதியில் தங்கியிருந்தார்கள் என்று சி.ஐ.டி. வட்டாரங்கள் தெரிவித்தன.

# எல்லை மீறிய வேகத்துடன் விமானம் ஆழ்கடல் பகுதி நோக்கி சென்றதேன்?

★ விமானத்தின் கருவிகளில் பிழை இருப்பது அறிவிக்கப்பட்டதும் விமானத்தை உடனடியாக இடது பக்கமாகத் திருப்பி புறப்பட்ட இடத்துக்கே — இரத்மலானைக்கே — செலுத்தும்படி விமானிக்கு உத்தரவிடப்பட்டது ஆனால் அவர் அதற்கு மாறாக விமானத்தை எதிர்த்திசையில் — வலது புறமாக — திருப்பி மேலும் ஆழ்கடல் பகுதியை நோக்கி செலுத்தியுள்ளார்.

★ மேற்குக்கரைக்கு பல மைல் தூரம் அப்பால் வழமையில் இல்லாத ஒரு பாதையில் விமானம் செலுத்தப்பட்டிருக்கிறது.

★ ஆகக் கூடியது மணிக்கு 520 கிலோ மீற்றர் வேகத்துக்கே தாக்குப் பிடிக்கக் கூடியதாகத் தயாரிக்கப்பட்ட இந்த விமானம் அதிவேகத்துடன் — மணிக்கு 700 கிலோ மீற்றர் என்ற வேகத்தில் — பறந்து கொண்டிருந்த போது திடீரென திருப்பப்பட்டிருக்கின்றது. இதுவும் விமானம் வீழ்ந்ததற்கு காரணமாக இருக்கலாம்.

—இவ்வாறு விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க தெரிவித்தார்.

''காலநிலை அவ்வளவு சீரற்றிருந்திருப்பின் விமானத்தைப் பறக்க அனுமதித்தது ஏன்'' — என்று அவரிடம் கேட்டபோது —

''தரையின் காலநிலை வானத்தின் காலநிலையிலிருந்து வேறுபட்டது. விமானம் வீழ்ந்து நொறுங்க இருந்த சமயம் அதன் சத்தம் இரட்டிப்பானதைத் தான் கேட்டதாகவும், ஆனால் சீரற்ற காலநிலையால் விமானம் வீழ்ந்து நொறுங்குவதை தாம் பார்க்க முடியாது போய்விட்டதாகவும் விமானத்தின் சத்தத்தை கேட்ட மீனவர் ஒருவர் கூறியிருக்கின்றார் — என்று பதிலளித்தார்.

எல்லை மீறிய வேகத்தில் பறந்து கொண்டிருந்த விமானம் கடலை நோக்கி வீழ்ந்த போது அதன் வேகம் மேலும் அதிகரித்திருக்கும் என்றும் —

அதனால் வீழ்ந்து நொறுங்கும் போது அது பல துண்டுகளாகச் சிதறியிருக்கும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# ஜே.ஆர்., பிரேமா, டி.பி., சந்திரிகாவுக்கு விமானம் ஓட்டியவர் பாக்கியநாதன்

கொழும்பு, செப். 19

முன்னாள் ஜனாதிபதிகள் ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாஸா, டி. பி. விஜேதுங்க மற்றும் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா ஆகியோருக்கு விமானியாக ஸ்குவாட்ரன் லீடர் பாக்கியநாதன் பணிபுரிந்திருக்கிறார். வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் அவர் விமான ஓட்டியாகப் பணிபுரிந்திருக்கின்றார்.

—இவ்வாறு கடலில் வீழ்ந்து அழிந்த ''அன்ரனோவ்'' விமானத்தின் விமானியான ரஞ்சன் பாக்கியநாதன் குறித்து அவரின் தந்தையான கே. பாக்கியநாதன் தெரிவித்தார்.

கடற்படையில் 25 ஆண்டுகள் பணிபுரிந்த பின் 1979 இல் ஓய்வுபெற்ற கே. பாக்கியநாதன் தமது மகன் ரஞ்சன் பாக்கியநாதன் குறித்து மேலும் கூறியதாவது:

ஸ்ரீலங்கா விமானப் படையில் ஆகக் கூடுதலான மணி நேரம் விமானத்தைச் செலுத்திய விமானி எனது மகனே ஆவார். அவர் 8 ஆயிரம் மணி நேரம் விமானங்களைச் செலுத்தியிருக்கிறார்.

வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் ஏறக்குறைய எல்லாப் போர் நடவடிக்கைகளிலும் அவர் பங்கு பற்றியிருக்கிறார் — என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் விமானி பாக்கியநாதனுக்குத் தொடர்பு உண்டா என்ற பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்குப் பதில் அளிக்கையில் தந்தையார் கூறியதாவது:-

எனது மகனுக்கு ஒரு வார்த்தை கூடத் தமிழ் பேச வராது. அவரை எப்படி புலி என்று குற்றஞ்சாட்ட முடியும்? அத்துடன் அவருடைய தாயார் ஒரு சிங்களப் பெண் அல்லவா?.

அவர் வடமராட்சி ஒப்பரேஷனிலும் பங்குபற்றினார். அவருக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன ''ரணவிறு'' பதக்கத்தையும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச ''ரணசுறு'' பதக்கத்தையும் வழங்கினார்கள் — என்றார்.

1989 ஆம் ஆண்டு மரியன் பெரேரா என்ற பெண்ணைத் திருமணம் செய்த ரஞ்சன் பாக்கியநாதனுக்கு 5 வயதில் ஒரு பெண் குழந்தையும் 4 வயதில் ஒரு ஆண் குழந்தையும் உள்ளன.

''உலகிலேயே வயதில் குறைந்த விமானப் பயிற்சியாளராக தனது இருபதாவது வயதில் பெருமை பெற்றவர் எனது மகன்'' — என்று ரஞ்சன் பாக்கியநாதனின் தாயார் நினெற் பாக்கியநாதன் குறிப்பிட்டார்.

''எனது மகனுக்கு என்ன நடந்தது என்பது பற்றி ஒருவரும் தெளிவாகக் கூறுகின்றார்கள் இல்லை.

''ஜனாதிபதி சந்திரிகா நேரடியாக தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தனது அனுதாபங்களை எனக்குத் தெரிவித்தார். ஒரு குறிப்பிட்ட ஆழத்துக்குக் கீழ் தேடுதல் நடத்துவதற்கு தங்களால் இயலாது என்று இந்திய கடற்படை கூறிவிட்டதாக அவர் என்னிடம் சொன்னார்''— என்று மேலும் குறிப்பிட்டார் நினெற் பாக்கியநாதன்.

''இரண்டு 'அவ்ரோ' விமானங்களை விடுதலைப்புலிகள் சுட்டுவீழ்த்திய பின்னர், வடக்கிற்கு முதலாவது விமானத்தைச் செலுத்திச் சென்ற விமானிகளில் ஒருவர் பாக்கியநாதன். அவரை நாம் இழந்தது பெருங்குற்றம்''— என்று குறிப்பிட்டார் மூத்த விமானப்படை அதிகாரி ஒருவர். (உ.க)

# தன்னிச்சையாக விமானம் ஓட்டுபவர் என்றும் தகவல்

கொழும்பு, செப். 19

கிடைக்கும் பணிப்புரைகளை செவிமடுக்காது தன்னிச்சையாக விமானம் செலுத்தும் பழக்கத்தை விமானி பாக்கியநாதன் கொண்டிருந்தார்.

—''ராவய'' பத்திரிகை இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றது.

அதி கூடிய நேரம் விமானம் செலுத்தி அனுபவம் பெற்றிருந்த பாக்கியநாதன் தன்னிச்சையாக விமானத்தைச் செலுத்தும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்.

அதனால் —

விமானத்தை மீண்டும் இரத்மலானைக்குக் கொண்டு வருவதற்காக இடதுபுறம் விமானத்தை திருப்புமாறு விடுக்கப்பட்ட பணிப்புரை [illegible]

(5 ஆம் பக்கம் பார்க்க)

# அந்த இறுதி விநாடிகள்...

'அன்ரனோவ்' விமானம் இரத்மலானை விமானநிலையத்திலிருந்து மேலெழும்பி 9 நிமிடங்களின் பின்னர் காலை 7-19 மணிக்கு கட்டுநாயக்க விமானக் கட்டுப்பாட்டு நிலைய ராடர் சமிக்ஞை கட்டுப்பாட்டாளருக்கும் விமானமோட்டிக்குமிடையில் இடம்பெற்ற பேச்சு ஒலிப்பதிவு நாடாவிலிருந்து.......—

கட்டுப்பாட்டதிகாரி; காலநிலை சீராக இருக்கிறதா?

விமானி: இல்லை. எமது உபகரணங்களில் ஏதோ கோளாறு இருப்பதாகத் தெரிகிறது.

கட்டுப்பாட்டதிகாரி: நீங்கள் பறக்கும் திசைக்கு முன்பாக 35 மைல் தூரத்துக்கு காலநிலை மிகமோசமாக இருக்கிறது.

விமானி: சரி, இடதுபுறம் சீராகவுள்ளதா?

கட்டுப்பாட்டதிகாரி: அப்பகுதி காலநிலை 25 மைல் தூரத்துக்கு சீராக இல்லை.

விமானி: விமானம் பறக்கும் உயரத்தைக் குறைத்து மீண்டும் இரத்மலானை செல்ல விரும்புகிறோம். ஆலோசனை தரவும்.

கட்டுப்பாட்டதிகாரி: இடப்புறம் திரும்பி நேரே செல்லுங்கள்.

விமானி: சரி.

கட்டுப்பாட்டதிகாரி! இப்போது நீங்கள் இடதுபுறம் திரும்பியவாறு இருக்கின்றீர்கள்.

விமானத்துக்குள்ளிருந்த விமான வழிக்கட்டுப்பாட்டதிகாரி விமானத்தின் வேகம் 700 மைல்களாக அதிகரிக்கிறது.

கட்டுப்பாட்டு நிலையத்துக்கு இறுதியாகக் கேட்ட குரல் இதுதான். இத்துடன் விமானம் ''ராடர்'' திரையிலிருந்து மறைந்து விட்டது. (உ)

# விசாரணைக் குழுவில் மூன்று உயரதிகாரிகள்

கொழும்பு, செப். 19

''அன்ரனோவ்'' விமானம் வீழ்ந்தது பற்றிய விசாரணையை விமானப்படையின் மூன்று உயரதிகாரிகளைக் கொண்ட குழு நடத்தி வருகின்றது.

இக்குழுவின் தலைவராக சிரேஷ்ட விமான அதிகாரி ஜி.டி. பெரேரா செயற்படுகின்றார். விங் கொமாண்டர்களான ஆர். டி. யாப்பா, கே. ஆர். ரணசிங்க ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

விமானப்படை மருத்துவ நிபுணரான எஸ். கருணரத்னாவும் இக்குழுவுக்கு உதவியாகச் செயற்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ]


## பனை மரக்காலை உரிமையாளர்களுக்கு

மக்களின் அத்தியாவசிய பனைமரத் தேவைகளை கருத்திற் கொண்டும், கண்டபடி பனை தறித்தலை கட்டுப்படுத்தும் முகமாகவும் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்து கொண்ட பனை மரக்காலை உரிமையாளர்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பனைமரம் தறிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் அனுமதி அளிக்கப்பட்ட மரக்காலைகள் மட்டுமே இப்புதிய நடைமுறையை பின்பற்றலாம். வேறெந்த மரக்காலைகளுக்கும் இவ் அனுமதி வழங்கப்படமாட்டாது. இவ் விதிகளை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பு:-

30-09-95க்கு முன்னர் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்து கொண்ட பனை மரக்காலை உரிமையாளர்களுக்கு மட்டுமே அனுமதிவழங்கப்படும்.

பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தாவடி.

(சி/2309)



## இதய அஞ்சலி

17-09-95 அன்று இறைபதமடைந்த
எமது ஆருயிர் நண்பன்
அ. அரவிந்தனின் தந்தை

**வடிவேலு அம்பிகைதாசன்**

அவர்களுக்கு எமது இதயம் நெகிழ்ந்த
அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

உரும்பராய் வாழ்
நண்பர்கள்

(38602)



## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் மூத்த ஆசிரியரும்,
ஆசான் கழகத் தலைவருமான
திரு. யேசுராஜன் அவர்களின் தாயார்

**திருமதி கிறகோறி பிரகாசம்**

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை
காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்
யா/ சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம்

(38600)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதம் தலைதூக்காதவாறு தீர்வுத்திட்டம் முன்வைக்க வேண்டும்

## அனுருத்த ரத்வத்த கூறுகிறார்

கொழும்பு, செப். 19

இராணுவத் தீர்வு மூலம், பயங்கரவாதத்தை நாட்டில் இருந்து இல்லாது ஒழித்து விட்டு பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்க அனுமதிக்காத தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த கண்டியில தெரிவித்தார்.

இலங்கை சுதந்திர ஆசிரியர் சங்கத்தின் கண்டிக் கிளையினரின் வருடாந்த மாநாடு, கண்டி வித்தியார்த்த கேட்போர் அரங்கில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அனுருத்த ரத்வத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இனப்பிரச்சினையைத் தீர்க்க இராணுவத் தீர்வை நாடுகிறார்.

அவர் வழியில் அவர் போன்ற பல பிரபாகரன்கள் தோன்ற இடமுண்டு.

இதனால் பயங்கரவாதத்தையே இல்லாதொழிக்கக் கூடிய தீர்வுத் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நாட்டு மக்களுக்குள் பெரும்பாலானோர், சமரசத் தீர்வின் மூலமே நாட்டில் சமாதானமும், சுபீட்சமும் உருவாக்கப்பட வேண்டும் என்பதில் திடமாக உள்ளனர்.

அவர்களது எண்ணத்தை யுத்தத்தால் நிறைவேற்ற முடியாது உள்ளது.

அரசியல் பொருளாதார இராணுவ தீர்வுகள் மூலமே இவற்றை நிறைவேற்றவும், பயங்கரவாதத்தினை நாட்டிலிருந்து ஒழிக்கவும் முடியும்.

அழிவுற்ற வடக்கையும், கிழக்கையும் புனரமைப்பதற்காக சர்வதேச நாடுகள் கைகொடுக்க முன் வந்தன.

வடக்கையும், கிழக்கையும் புனரமைப்பதில் தடையாக உள்ளது பயங்கரவாதமே.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-எ)

# திடீர் விலை அதிகரிப்பால் குடாநாட்டு மக்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 19

குடாநாட்டில் பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

பொருள்களின் விலை அதிகரிப்பதால் வியாபாரம் வீழ்ச்சியுற்றிருப்பதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

சவர்க்காரத்திற்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. சன்லைட் சவர்க்காரம் ஒன்று 32 ரூபா வரை விற்கப்படுகிறது.

உணவுப் பண்டங்களின் விலைகளும் அதிகரித்துள்ளன ஐந்து ரூபாவுக்கு விற்ற வடை 6 ரூபாவாக விற்கப்படுகிறது. 2 ரூபாவுக்கு விற்கப்பட்ட றொட்டி 3 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதேபோல், அனைத்துப் பொருள்களினது விலைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. (ஓ-68)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப் 19

பாடசாலை அணிகளுக்கிடையில் — கோட்டரீதியில் வருடா வருடம் நடத்தப்படும் உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்கள்:

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் — 15 வயதுப் பிரிவு:

3-30 மணிக்கு — முத்துத்தம்பி ம. வி. எதிர் கனகரத்தினம் ம. ம. வி.

4-30 மணிக்கு கோண்டாவில் பரஞ்சோதி வித். எதிர் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் (15 வயதுப் பிரிவு):

3-30 மணிக்கு நாவாந்துறை றோ. க. வி. எதிர் சென் சாள்ஸ் ம. வி.

4-30 மணிக்கு கொழும்புத்துறை இந்து ம. வி. எதிர் சென் ஜோசப் ம. வி.

17 வயதுப் பிரிவு —

நல்லூர் விக்கினேஸ்வரா வித்தி. எதிர் நாவாந்துறை றோ. க. வித்தி.

கொக்குவில் இந்து கல்லூரி மைதானத்தில் — (17 வயதுப் பிரிவு):

3-30 மணிக்கு முத்துத்தம்பி ம. வி. எதிர் கோண்டாவில் இராமகிருஷ்ண ம. வி.

4-30 மணிக்கு கோண்டாவில் இந்து ம. வி. எதிர் பெரியபுலம் ம. வி.

(ஓ-20)

# உண்ணாவிரத நிகழ்வில் இன்று பங்குபற்றுவோர்

யாழ்ப்பாணம், செப். 19

தியாகி திலீபனின் 8 ஆவது ஆண்டு நினைவாக கோட்ட ரீதியாக இன்று நடைபெறும் உண்ணாவிரதங்களில் பங்குபற்றும் பொது அமைப்புகள்:

### வலிகாமம்

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில்— நகைத் தொழிலாளர் சங்கம், அரியாலை மக்கள், கடற்றொழிலாளர் சங்கம், இடம்பெயர்ந்தோர் முகாம், ஆனைக்கோட்டை மக்கள்.

### தீவகம்

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில்— லவனிதா குடியிருப்பு மக்கள், தம்பாட்டி அ. த. க. பாடசாலை, வேலணை ப. நோ. கூ. சங்கம்.

### தென்மராட்சி

மணற்குணாய்பிள்ளையார் கோயில் முன்றலில்— கைதடி கலைவாணி வித்தியாலயம், கைதடி சரஸ்வதி ச. ச. நிலையம், கைதடி பாரதி ச. ச. நிலையம், மீசாலை மேற்கு, மீசாலை கிழக்கு மக்கள். நுணாவில் மக்கள் அறவழி ஊழியர்கள், சதீஸ் இளங்கோ, நாவற்காடு, புனைவேலி மருதடி, கலைவாணி, கணேசா ச. ச. நிலையங்கள், புலோப்பளை சிற்றூர் மக்கள், ச. ச. நிலையம்.

### வடமராட்சி

முத்தவிநாயகர் கோயில் மைதானத்தில் — வல்வெட்டி, கருணாநிதி, தென்னவன், ச. ச. நிலைய உறுப்பினர்கள், மக்கள், வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, கரவெட்டி கிழக்கு சிற்றூர் மக்கள்.

### கடற்புலிகள்

கடற்புலிகள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திலீபன் நினைவு உண்ணாவிரதத்தில் இன்றைய தினம் கலந்து கொள்வோம்.

★ நாகர்கோவிலில்— காலை 7-00 மணிக்கு ராஜன் நகர் அம்பன் மக்கள்.

### மாணவர் அமைப்பு

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தியாகதீபம் திலீபனின் ஆண்டு நினைவு அடையாள உண்ணாவிரதம் இன்று நடைபெறும் பாடசாலைகள்.

★ காலை 8-30 மணிக்கு மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி. (இ)

# மதில் இடிந்து வீழ்ந்ததில் சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், செப். 19

வெடித்துக்காணப்பட்ட மதிலில் பூப்பிடுங்குவதற்காக ஏறிய சிறுவன் மதில் சரிந்து வீழ்ந்த போது அதற்குள் சிக்கி படுகாயமடைந்தான்.

கரவெட்டி நவிண்டில் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதேவிடத்தைச் சேர்ந்த யோகேந்திரன் கஜேந்திரன் (10 வயது) என்ற சிறுவனே படுகாயமடைந்தார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஓ-15

# அதிபர் கூட்டம்

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்கள் கூட்டம் இன்று செவ்வாய் பி. ப. 2-30 மணிக்கு நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையில், கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும். (ஓ)

# அவிழ்த்து விடப்பட்ட கால்நடைகள்; வலிமேற்கு விவசாயிகள் கவலை

## பிடித்துக் கட்டி ஏலத்தில் விட வற்புறுத்து

அராலி, செப். 19

அண்மையில் பெய்த மழையை தொடர்ந்து வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் காலபோக நெல் விதைப்பு நடைபெற்று வருகிறது.

எனினும் "முன்னேறி பாய்தல்" இராணுவ நடவடிக்கையின் போது அவிழ்த்து விடப்பட்ட ஆடு, மாடுகள் இன்னும் சொந்தக்காரர்களால் பிடித்துக் கட்டப்படாமல் வயல் வெளிகளில் அலைந்து திரிகின்றன.

இப்படியான கால் நடைகளை விவசாயிகள் தேடிப் பிடித்துக் கட்டிவருகின்றனர்.

சொந்தக்காரர்கள் அவற்றை கிராம சேவை உத்தியோகத்தர்களினூடாக பெற்றுக் கொள்ள தவறும் பட்சத்தில் கிராம சேவை உத்தியோகத்தர்கள் அவற்றை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என இப்பிரதேச கிராம சேவை உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர். (இ-12)

# வலிகாமம் வடக்கில் ஷெல்லினால் பெருமளவு விவசாய நிலங்கள் நாசம்

பலாலி, வளவெட்டிப் பகுதிகளில் இருந்து படையினர் சமீபத்தில் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சி காரணமாக வலிகாமம் வடக்கில் பெருமளவு விவசாய நிலங்கள் அழிந்துள்ளன.

அகோர ஷெல் தாக்குதல்கள் காரணமாக ஈவினை, குப்பிளான், புன்னாலைக்கட்டுவன், அச்செழு நிலாவரைப் பகுதிகளில் உள்ள பெருமளவு விவசாய நிலங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில், பயிரிடப்பட்டிருந்த மரவள்ளி வெங்காயம், குரக்கன், பூசனி, வாழை, வெண்டி, கத்திரி, மிளகாய் மற்றும் சிறுதானியப் பயிர்கள் பலவும் அழிக்கப்பட்டுள்ளன.

பெருமளவு கால் நடைகளும் காயப்பட்டும் இறந்தும் உள்ளன.

படையினரின் முன்னேற்ற முயற்சியின் போது ஈவினைப் பகுதியில் ஒரே இடத்தில் 4 ஆடுகளும், 3 எருதுகளும், ஒரு பசுவும் இறந்ததாகவும், 5 மாடுகள் காயத்துடன் இறந்ததாகவும் அங்கிருந்து இடம்பெயர்ந்தவர்கள் தெரிவித்தனர். (இ-18)

# தமிழ் நாட்டில் "ஒப்பரேஷன் வீனஸ்"

## 136 பேர் கைதாகினர்

புதுடில்லி, செப். 19

"ஒப்பரேஷன் வீனஸ்" என்ற பெயரில் தமிழ் நாடு பொலீஸார் மாநிலம் எங்கும் நடத்திய தேடுதல் நடவடிக்கையில். 153 கிலோ கிராம் வெடிமருந்து உட்பட சுமார் 5ஆயிரம் ஜெலட்டின் குச்சிகள் 23ஆயிரம் டிக்ரேட்டர்கள், 3ஆயிரம் பியூஸ் வயர்கள் என்பன சட்ட விரோதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இத் தொடர்பாக செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டம், தர்மபுரி, காமராஜர், விழுப்புரம், திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 136 பேர் கைது செய்யப்பட்டனர்.

தமிழ்நாட்டில் சமீபத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களை அடுத்து பொலீஸார் இந்த தேடுதல் நடவடிக்கையை நடத்தி இருந்தனர். (இ-எ)

## திடமனதைத் தந்தான்

பாரதத்திடம் நீதிகேட்டு போர் தொடங்கினான் - இவன்
பன்னிரண்டு நாட்களாக பசி மறந்திட்டான்
நீதி கிடைக்குமென்று நம்பியிருந்தோம் - ஆனால்
நினைத்தது நடக்கவில்லை ஏமாந்து விட்டோம்
விடுதலைக்காய் தலை சாய்த்தான் திலீபன் - அன்று
வாசலெங்கும் பூ மலரும் வரலாறின்று
தியாகத்தின் சிகரமாய் உயர்ந்தான் - திலீபன்
திடமனதை தந்து சென்றான் எங்களுக்கு

— நிலாமகன்

# தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை அரசு ஏற்கவில்லை

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு செப். 19

தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை அரசு ஏற்கவும் இல்லை; இந்த கோட்பாட்டின் அடிப்படையில் காணி உரிமைகள் வகுக்கப்படவும் இல்லை.

இவ்வாறு நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் விசேட கூட்டத்தில் உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவித்த அதிகாரப் பரவலாக்கல், காணி பகிர்வு சம்பந்தமான மேலதிக விளக்கம் வருமாறு:

குடியேற்றத் திட்டங்களை மேற்கொள்ளும் போது அந்தந்த மாவட்டத்தில் வசிக்கும் மக்களுக்கே முதலிடம் அளிக்கப்படும். அதன் பின் அதே மாகாணத்தைச் சேர்ந்த மக்களுக்கு முதலிடம் அளிக்கப்படும்.

ஒரு மாகாணத்தைச் சேர்ந்தோர் பிறிதொரு மாகாணத்தில் காணியைச் சொந்தமாக வைத்திருக்க எவ்வித தடையும் இருக்கமாட்டாது. அரச அமைப்பின் 12 ஆவது அத்தியாயத்தில் இது தெளிவாக கூறப்பட்டுள்ளது.

எந்த ஒரு மாகாண சபையாவது, மற்றைய மாகாணத்தார் தமது மாகாணத்தில் காணி வாங்க முடியாது என சட்டம் கொண்டு வந்தால் அது அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளுக்கு முரணாக இருக்கும்.

அதாவது யாரும் எங்கும் காணி வாங்கலாம். உயர்நீதி மன்றத்தில் இது தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யலாம். (ஓ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 'சிங்கர்' தையல் இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு ச. தம்பிமுத்து. 'முத்தகம்', மத்தியவீதி, மீசாலை கிழக்கு, மீசாலை. (38575)

3 போத்தல் பால் எடுக்கக் கூடிய சணல் ஆடு, பால் எடுக்கக்கூடியநிலையில் 8மாத சணல் கடாக்குட்டியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (38570)

### புலமைப் பரிசில்

வெற்றிக்கனி இதழ் — 4 வெளிவந்துவிட்டது. மாதிரி வினாவிடை ஆண்டு — 4 ஆக்கம்: பொன் சக்திவேல் இவை இரண்டும் Brightஇன் வெளியீடுகள்! புலமைப்பரிசில் ஆண்டு — 5 1995ஆம் ஆண்டு முதல் அமுலுக்குவரும் புதிய பாடத்திட்டத்தை தழுவியது. ஆக்கம்: தம்பிஐயா தேவதாஸ். விற்பனை பூபாலசிங்கம் புத்தக நிலையம். யாழ்ப்பாணம். [சி-2234]

### மணமகன் தேவை

Australian Citizen Ship உடைய 28 வயது Dip-in-Accountancy முடித்த சைவ போசனமுடைய, 7இல் செவ்வாய் உள்ள அழகிய மணமகளுக்கு பட்டதாரி, கணக்காளர், டாக்டர், எஞ்சினியர் விரும்பத்தக்கது. சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். இல. 848, மே/பா உதயன். (38568)

### ஓடு தேவை

தொகையாக வீட்டு ஓடுகள் தேவை விற்க விரும்புவோர் நேரிலோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும்: "சிறிஅமரா நகைமாளிகை" 74/1, சந்தோசம் (கஸ்தூரியார்) வீதி, யாழ்ப்பாணம். [38583]

---

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

சிவாகி கல்வி நிலையம்
சாவகச்சேரி

ஆரம்பம்:
**21 — 09 — 95**
வியாழன் 3-30 p.m.

BY **BRITTO**

(33586)

---

## கீன் கல்வி நிலையம்

பலாலி வீதி.
திருநெல்வேலி.

**A/L - 96 DAY CLASS**

(பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு)

கலை, வர்த்தகம்
வழமையான ஆசிரியர் குழு

ஆரம்பம்:
**29 — 09 — 1995**
வெள்ளி காலை 8மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-2302)

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி சிவகுமார் கார்த்திகா

(19 — 09 — 1995)

சிவகுமார் - நித்தியபாக்கியம் தம்பதிகளின் செல்வப் புதல்வி

**கார்த்திகா**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று சுவிஸில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

கார்த்திகாவை அன்பு அப்பா, அம்மா, கொக்குவில் தாத்தா, அம்மம்மா, நாவற்குழித் தாத்தா, அப்பம்மா, கேதீஸ்வரன் மாமா, மாமி, மாதங்கி மச்சாள், மச்சான் ஜெயாமாமி மற்றும் பிரான்ஸ் பெரிய மாமா, மாமி, சின்னமாமா, மாமி (சுவிஸ்) ஸ்ரீமாமா, மாமி, வசந்தி மாமி, கொக்குவில் யோகன் மாமா, கணேஸ் மாமா, நயினாதிவுப் பூட்டி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் செல்வியை நயினை நாகபூசணி அம்மாள் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

[38581]

---

## பொருளியற் கல்லூரி

110/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)

**A\L 96 DAY CLASS**

(பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு)

**முழுப்பாடத் திட்ட வகுப்பு**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| வர்த்தகம் | — | வரதன், சிவா |
| அளவையியல் | — | சர்மா |
| இந்துநாகரீகம் / இந்துசமயம் | — | காரை, கெங்கா |
| தமிழ் | — | திருமதி. மீரா |
| புவியியல் | — | சண் |
| கிறிஸ்தவம் | — | நிரஞ்சன் |

ஆரம்பம்: **25 — 09 — 1995**
திங்கள் 8-00 a.m.

(சி-2297)

---

# BECON

யாழ்ப்பாணம்

**A/L - 97**

வணிகப் புள்ளி விபரவியல்.
திரு. S. S. மனோகரன்

ஆரம்பம் **24 - 09 - 1995**

பிரிவு 8.00 மணி
பிரிவு 7.00 மணி

(சி-2295)

---

## இலங்கை நூலகச் சங்கம்

# நூலகவியல் பரீட்சை

நவம்பர் மாத நடுப்பகுதியில் நடைபெறும் பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

### நூலகவியல் முதல் வருட வகுப்புகள்

க. பொ. த. (உ. ப) முடிவுகள் கிடைக்கப் பெற்றதும் ஆரம்பமாகும்.

### நூலகவியல் பயிற்சி நெறி

கல்வித் தகைமை, கட்டண விவரம் அறிய நேரில் வருக.

கா. மாணிக்கவாசகர்,
யாழ். மத்திய கல்லூரி.

(38587)

---

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் —
சாவகச்சேரி

## தமிழ் தட்டச்சு இயந்திரம் பெறல்

மேற்படி எமது சங்கத்தின் பாவனைக்கு தரமான புதிய அல்லது தற்போது பாவனையிலுள்ள தரமான தமிழ் தட்டச்சு இயந்திரம் தேவையாகவுள்ளது. விற்பனை செய்ய விரும்புவோர் நேரில் அல்லது கடித மூலம் 25-09-95இற்கு முன் இனம். விற்பனைப் பெறுமதி, தரம் ஆகிய விபரங்களுடன் அறியத் தரவும்.

பொது முகாமையாளர்,
சாவ. ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.

(சி-2292)

---

## அறிவித்தல்

### விதை உருளைக்கிழங்கு முற்பண அறவீடு

1995/96 காலபோகத்திற்கென ஹொலண்ட் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படவிருக்கும் 150 மெ. தொன் விதை உருளைக்கிழங்கு பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள விவசாயிகள் இக்கிழங்கைப் பெற்றுக் கொள்வதற்கு இலகுவாக 20-09-95 இல் இருந்து 15-10-95 இற்குள் தாம் விண்ணப்பித்த விதைக் கிழங்குகளுக்கு ஒரு பெட்டிக்கு 3,500/- ரூபா முற்பணமாக தங்கள் பிரதேச செயலர் பிரிவுகளில் அமைந்திருக்கும் கமநல சேவை நிலையங்களில் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

[சி-2305]

---

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

# வெற்றிடங்கள்

**பண்ணை மேற்பார்வையாளர் (ஆண்)**

தகைமை:
க. பொ. த. (சா/த) அங்கீகரிக்கப்பட்ட விவசாய நிறுவனமொன்றில் பயிற்சி பெற்ற/வேலைபார்த்த அனுபவம்.

வயது: 30 இற்கு மேல்.

**விடுதி மேற்பார்வையாளர் (ஆண்/பெண்)**

தகைமை:
க. பொ. த. (உ/த) இத்துறையில் அனுபவம்.

வயது: 35 இற்கு மேல்

**உப விடுதிக் காப்பாளர் (ஆண்/பெண்)**

தகைமை: க. பொ. த. (சா/த)

வயது: 30 இற்கு மேல்.

குறிப்பு:
விடுதிப் பணிக்கு விண்ணப்பிப்போர் குடும்பப் பொறுப்பு அற்றவராகவும், முழுநேரமும் விடுதியில் தங்கியிருந்து பணியாற்றக்கூடியவராகவும். மாணவரைப் பரிவோடு வழி நடத்தவும், வழி காட்டவும் வல்லவராகவும் இருக்கவேண்டும்.

ஊதியம்: பேசி நிர்ணயிக்கப்படும்

விண்ணப்பங்கள், சுய விபரங்களுடன், சொந்தக்கையெழுத்தில்

கடைசித்திகதி: 30 — 09 — 1995

சோ. பத்மநாதன்,
செயலாளர்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

[சி-2308]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேச நூலகம்



உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## போர் வெறியும் போக்கிரித்தனமும்

தென்னிலங்கையைச் சேர்ந்த பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட சகல இளைஞருக்கும் இராணுவப் பயிற்சி.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சந்திரிகா கண்டு பிடித்துள்ள கடைசி மார்க்கம் இது!

வடக்கு - கிழக்கு போர் தொடருமானால், அரசின் யுத்த நடவடிக்கைகளை வலுப்படுத்த நேரிடும். அதன் பொருட்டு கட்டாய இராணுவ சேவைத் திட்டத்தைச் செயற்படுத்துவது அவசியம். —இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருக்கிறார்.

சிங்கள இளைஞர்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்குவது என்ற யோசனை இப்போது திடீரென்று உதித்ததல்ல. வடக்கு-கிழக்கில் மீண்டும் போர்—ஈழப் போர் மூன்று—தொடங்கியதுமே அரசிடம் இந்த எண்ணம் குடிகொண்டு விட்டது. வெண்தாமரை இயக்கம் உருவாக்கப்பட்டதே அதற்காகத்தான்!

வாய்ச்சொல்லில் சமாதானப் பிரியராக வேடம் போட்டிருக்கும் சந்திரிகா உண்மையாக ஒரு போர்ப் பிரியர் — போர்வெறியர் — என்பதனை இப்போது வெளிக்காட்டியிருக்கிறார்!

சொல்லொன்று செயல் வேறாகப்போரை வலுப்படுத்தி தமிழர்களைக் கொன்றொழிப்பதற்கான — படுகொலை செய்வதற்கான — நடவடிக்கைகளை முடுக்கி விடுகிறார்.

எதிரணியில் இருந்தவேளை போர் அவருக்கு அர்த்தமற்றதாகத் தெரிந்தது. அதில் வெற்றி காணமுடியாது என்று கருதினார். ஆனால் இப்போது அந்த நிலைப்பாட்டை நூற்றுக்கு நூறுவீதம் மறுவளமாக மாற்றிக்கொண்டு விட்டார்!

கட்டாய இராணுவ சேவை என்பது ஒரு பாரதூரமான விவகாரம். முழு நாட்டையும் இராணுவ மயப்படுத்தும் நடவடிக்கை. எதிரி நாடு ஒன்றுடன் நடக்கும் போரில் அரச படைகள் தனித்து நின்று வெல்ல முடியாது என்று கருதும் போதே கட்டாய இராணுவ சேவை கொண்டுவரப் படுவது வழக்கம்.

சிங்கள இளைஞர்கள் தமது உயிர்களுக்கு அஞ்சி படையில் சேர முன் வருகிறார்களில்லை. அதனை நிவர்த்தி செய்வதற்கு, அவர்களைக் கட்டாயப்படுத்தி இராணுவப் பயிற்சி வழங்குவதற்கே இந்தத் திட்டம்.

கட்டாய இராணுவ சேவை குறித்து சந்திரிகா அறிவித்துள்ளதாவது —

இப்போது நடக்கும் போர் வேறு நாடு ஒன்றுடனானது. இப்போதுள்ள படை பலத்தைக் கொண்டு போரை வெல்ல முடியாது. அதற்கான வலு இல்லை. சிங்கள மக்களையும் சேர்த்துக் கொண்டு போராட வேண்டும் தமிழர்களுக்கு எதிராக சகல சிங்களவரையும் அணிதிரட்ட வேண்டும் - என்ற முடிவுக்கு வந்திருக்கிறார் என்பதே அர்த்தம்.

போரைத் தீவிரப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடும் அதே வேளை தீர்வு யோசனை ஒன்றை வெளியிட்டு, அரசியல் தீர்வில் நாட்டம் இருப்பதாகக் காட்டுவது மிகப் பெரிய கபடத்தனமாகும். உலகத்தை ஏமாற்றும் பெருந்தந்திரம். தமது சுயரூபத்தை மறைக்கும் போக்கிரித்தனம்!

## உதவி விமானி ஒருவரின் சிதைந்த தலைப் பகுதி மீட்பு

'அன்ரனோவ்' விமானம் வீழ்ந்த கடல் பகுதியில் மீட்கப்பட்ட சிதைந்த முகப்பகுதி அந்த விமானத்தின் உதவி விமானியான லெப்டினன்ட் மார்டின்டைன் என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

தலை மயிருடன் கூடிய இந்த சிதைந்த பகுதியை திருகோணமலை கடற்படைப் பிரிவில் வொறிச் சாரதியாகப் பணி புரியும் அவரது தந்தை அடையாளம் காட்டியுள்ளார்.

சில சிகரெட் பக்கெட்டுகள், டயறிகள், ஜேக்கின்கள், சப்பாத்துகள், பேர்ஸ்கள், போட்டோ அல்பங்கள் போன்ற பொருள்களும் சம்பந்தப்பட்ட கடற்பரப்பில் இருந்து மீட்கப்பட்டு கொழும்பு விமானப்படைத் தலைமை அலுவலகத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதேசமயம்—

வெடித்துச் சிதறிய விமானத்தின் சில பகுதிகள் மரவில கடற்பகுதியிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

படையினரின் சிதைந்த பாதணிகள், பல் துலக்கும் தூரிகைகள், பிரயாணப் பைகள், ஆயுத தாளபாடங்களின் பகுதிகள், விமானத்தின் அலுமினியத்துண்டுகள் என்பனவே அக்கடல் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

(உ-எ)

## வேலை நிறுத்தத்தினால் ரயில்சேவை ஸ்தம்பிதம்

### ஏனைய பல சேவைகளும் பாதிப்பு

கொழும்பு, செப். 19

தொழில்நுட்ப சேவை அதிகாரிகள் வேலை நிறுத்தம் காரணமாக நேற்று நண்பகலுக்குப் பின்னர் கொழும்பு மற்றும் தென் பகுதிகளில் ரயில் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன.

இந்த மூன்று நாள் வேலை நிறுத்தத்தில் ரயில்வே விவசாய சேவைகள், தொலைத்தொடர்பு சேவை, மின்சார சேவை, குடிதண்ணீர் சேவை ஆகியவற்றைச் சேர்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் குதித்துள்ளதால் அந்த நந்த சேவைகளும் நாட்டில் பரவலாக பாதிப்படைந்துள்ளன.

தொழில்நுட்ப அதிகாரிகளின் 5 கோரிக்கைகள் காரணமாக இந்த வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது.

நாளை புதன்கிழமை மாலை 6 மணி வரை இந்த வேலை நிறுத்தம் நடைபெறும் என்று தொழில்நுட்ப சேவையாளர்களின் தொழிற் சங்க சம்மேளனம் கூறுகிறது.

[உ-ஓ-க-6]

## காலியில் அமைச்சர்களுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

காலி, செப். 19

கடந்த வெள்ளிக்கிழமை காலி நகருக்குச் சென்ற அமைச்சர்கள் தொண்டமான், இ.வி. குணரத்ன ஆகியோருக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

காலி, மாநகரசபை மண்டபத்தில் தென்மாகாணசபையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கைத்தொழில் கண்காட்சியைத் திறந்து வைப்பதற்கே அமைச்சர்கள் இருவரும் அங்கு வருகை தந்திருந்தனர்.

மண்டப வாயிலில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. அமைச்சர்களுடன், அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் மாத்திரமே உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர், பத்திரிகையாளர்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கண்காட்சிக்கு பொருள்களை எடுத்து வந்தவர்கள் கூட உள்ளே செல்ல முடியாது தடுக்கப்பட்டனர்.

கூட்டம் முடிவடைந்த பின் அனைவரும் கண்காட்சியை சென்று பார்க்க அனுமதிக்கப்பட்டனர். [ஓ]

## ஏழாலைப் பகுதி பாடசாலைகள்

ஏழாலை, செப். 19

ஏழாலைப் பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளதால் அங்குள்ள பாடசாலைகள் இயங்க முடியாத நிலை உருவாகியுள்ளது. சில பாடசாலைகள் இராணுவ நடவடிக்கையால் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிப் பாடசாலைகளை வேறு இடங்களில் இயங்கச் செய்வது குறித்து அதிபர்கள் அந்தந்தப் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களுடனும், ஆசிரியர்களுடனும் கலந்துரையாடல்களை நடத்தி வருகிறார்கள்.

ஏழாலை மகா வித்தியாலயத்தை இயக்குவது குறித்து நாளை காலை 9.00 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் கலந்துரையாடல் நடைபெறும் என்று அதிபர் அறிவித்துள்ளார்.

ஏழாலை கிழக்கு சைவ இசிதோர் றோ. க. த. க. பாடசாலையை இயக்குவது குறித்த கலந்துரையாடல் நாளை மு.ப. 10 மணிக்கு மருதனார்மடம் கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என்று அதிபர் அறிவித்துள்ளார். (அ-45)

---

**தன்னிச்சையாக...,**

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விமானத்தை அவர் வலது புறம் திருப்பினாரா என்ற சந்தேகம் தோன்றியுள்ளது எனவும் "ராவய" தெரிவித்துள்ளது. (உ-10)

## விசர் நாய்க்கடி தடுப்பூசி வரவில்லை

யாழ்ப்பாணம், செப். 19

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'ஹபறண' கப்பலிலும் விசர் நாய்க்கடி தடுப்பூசி மருந்து எடுத்து வரப்படவில்லை என்று யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கப்பலில் யாழ் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்திற்குரிய - மூன்றாம் காலாண்டுக்கான - ஏனைய தடுப்பூசி மருந்து வகைகள் எடுத்துவரப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (உ-4-15)

## கிராம சேவகர் அலுவலக இடமாற்றம்

இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த ஏழாலை பகுதி மக்களின் நலன்கருதி, ஏழாலை தெற்கு, குப்பிளான் தெற்கு கிராம சேவையாளர்களின் அலுவலகங்கள் உரும்பிராய் வடக்கு, இந்துக் கல்லூரி ஒழுங்கையில் இயங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-45)

## அச்செழு, நவக்கிரி மீது தொடர்ந்து ஷெல் தாக்கு

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று திங்கட்கிழமையும் அச்செழு, நவக்கிரி, ஈவினை ஆகிய பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மக்கள் ஏற்கனவே இடம் பெயர்ந்து விட்டுச் சென்ற பகுதிகளில் ஏராளமான ஷெல்கள் விழுந்து வெடித்தன.

தொடர்ந்தும் ஏழாவது நாளாக இப்பகுதிகள் மீது ஷெல் வீச்சு தீவிரமாக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் இருந்து பெரும் எண்ணிக்கையில் மக்கள் இடம்பெயர்ந்து விட்டதினால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.

(அ-11-15-173)

## குடும்பநல உத்தியோகத்தர் பதவிக்கு போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம். செப். 19

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள எட்டு மாவட்டங்களில் இருந்தும் குடும்ப நல உத்தியோகத்தர் பயிற்சி பதவிக்குப் பெண்கள் நியமிக்கப் பட உள்ளனர்

போட்டிப் பரீட்சை ஒன்று நடத்தப்பட்டுத் திறமை அடிப்படையிலும், மாவட்ட விகிதாசார அடிப்படையிலும் நியமனங்கள் வழங்கப் படும்.

ஜி.சி.ஈ சாதாரண தரத்தில் மொழி, கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றவர்கள் இப் பயிற்சிப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

போட்டிப் பரீட்சை எதிர் வரும் டிசெம்பர் இரண்டாம் திகதி எட்டு மாவட்டங்களிலும் நடைபெறும்.

விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் ஒக்ரோபர் இருபதாம் திகதியாகும்.

மாவட்ட ரீதியாக யாழ்ப்பாணம் - 192, கிளிநொச்சி - 81, முல்லைத்தீவு - 18, மன்னார்- 31, வவுனியா- 29. திருகோணமலை - 46, மட்டக்களப்பு- 49, அம்பாறை - 11 பேர் என்ற எண்ணிக்கையில் தமிழர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

யாழ் மாவட்ட விண்ணப்பதாரிகள் யாழ். விக்ரோறியா வீதியிலுள்ள யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைத்தால், அவை [illegible] திருகோணமலைக்குக்க ஏற்[illegible] வைக்கப்படுமென்று [illegible] கப்பட்டது.

போட்டிப் பரீட்சை குறித்த விவரங்கள் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரதியையும் மாதிரி விண்ணப்ப படிவத்தையும் யாழ். மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கையிலுள்ள "உதயன்" விளம்பர முகாமையில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

---

**தொண்டு...**

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சேர்ந்தனர்.

'யுனிசெவ்' மற்றும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகப் பிரதிநிதிகள் நாளை வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பர்.

நேற்று இவர்கள் யாழ். மாநகரசபை மற்றும் யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்தனர்.

இவர்கள் இன்று யாழ். செயலகம், போதனா வைத்தியசாலை, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆகியவற்றுக்கும் —

இடம்பெயர்ந்தோர் தங்கியிருக்கும் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆகிய வற்றுக்கும் —

நாவற்குழி வனிதா குடியிருப்பு மற்றும் கைதடி, வரணி, இயற்றாலை குடியேற்றத் திட்டங்களுக்கும் —

அவர்கள் நேரில் சென்று பார்வையிடவுள்ளனர்.

(உ-4)

---

**விமான...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவதானிப்பு நீர்மூழ்கிகள் மற்றும் சாதனங்களைப் பயன்படுத்திப் பல முக்கியமான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று விமானத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிங்கப்பூரிலிருந்து இந்த உபகரணங்களைக் கொண்டுவர கணிசமான காலம் எடுக்கும் என்பதால் விசாரணைகளை ஆரம்பிக்கக் குறைந்தது இரண்டு வாரங்களாவது தேவைப்படும் என்றும் கூறப் பட்டது. [உ-க-4]

---

**புலிகளின்....**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கமானி கருவியை தமக்கு தந்துதவுமாறு அவசரக் கோரிக்கையை படையினர் விடுத்துள்ளனர்.

உரிய "ராடர்" கருவிகள் தமக்கு வழங்கப்பட்டால், புலிகளின் குறித்த நிலைகள் மீது நிச்சயமான தாக்குதல்களை மேற்கொள்ள முடியும் என்றும்—

வீணான வெடிகுண்டு இழப்புகளைத் தவிர்க்க முடியும் என்றும் —

சிரேஷ்ட கட்டளையிடும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-4-6)

## தொலைக்கல்வி ஆசிரியருக்கு

1991/93 - கற்கைநெறி, விசேட பயிற்சிநெறி, 93/95 கற்கைநெறிப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு செயல்முறைப் பரீட்சை சம்பந்தமாக அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளன.

மருதனார்மடம் தொலைக்கல்வி நிலயத்தைச் சேர்ந்த சம்பந்தப்பட்டவர்கள் நாளை புதன்கிழமை பி.ப. 3மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

---

**குடாநாட்டில்...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாறை மாவட்டத்திலிருந்த அதிரடிப்படையினர் அவசர அவசரமாக மட்டக்களப்புக்கு அனுப்பப்படுவதாகவும் —

அச்செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-6)

---

**மக்கள்...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டுக்கு வீடு வாசல்களில் தியாகி திலீபனின் சிறிய நினைவுப் பந்தல்கள் அமைப்பதில் சிறார்கள் பெரும் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

இதனால் தியாகி திலீபனின் திருவுருவப் படங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் நிலையும் உருவாகி உள்ளது.

தென்மராட்சியில் நுணாவில் மணக்குணாய் பிள்ளையார் கோவிலில் அமைக்கப்பட்டுள்ள பிரதான பந்தலில் உண்ணாவிரதம் அனுஷ்டிப்போர் எண்ணிக்கை நாளுக்கு நாள் பல மடங்கு அதிகரித்து வருகிறது.

[அ-15-173-31-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனம் கனடிய கிறிஸ்தவ சிறுவர் நிதியம் (C. C F. C.)

மேற்படி நிதியத்தின் மூலம் யாழ். குடாநாட்டுக்குள் உதவிபெறும் சகல மாணவர்களும் தமது பதிவு இலக்கம், தமது பெயர், தற்சமயம் வசிக்கும் முகவரி என்பனவற்றை உடனடியாக வட்டுக்கோட்டையில் எமது காரியாலயத்திற்கு நேரடியாகவோ, கடிதம் மூலமாகவோ அறியத்தரவும்.

திட்ட உத்தியோகத்தர்.
கனடிய கிறிஸ்தவ சிறுவர் நிதியம்,
ஆதீன காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

(சி-1734)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நகுலேஸ்வரி ஆறுமுகம்

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் மு. ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியுமான திருமதி நகுலேஸ்வரி ஆறுமுகம் அவர்கள் 18 – 09 – 1995 திங்கட்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற A. S. அருணாசலம் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், பாலசிங்கம் (இளைப்பாறிய அரசாங்க அதிபர்), திருமதி கு. கமலாம்பிகை (கனடா), திருமதி ப. இராஜேஸ்வரி, சண்முகலிங்கம் (லண்டன்), திருமதி க. தர்மாம்பிகை (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரோஜினிதேவி, மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற குமாரசுவாமி, பத்மநாதன் (இளைப்பாறிய பதிவாளர், யாழ். மாவட்ட நீதிமன்றம்), சரஸ்வதி (லண்டன்) கனகரட்ணம் (துறைமுக அதிகாரி கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று [19-9-95] செவ்வாய்க்கிழமை காலை 9–00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அந்திமக்கிரியைக்காக ...பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்...டு 11-00 மணிக்கு அவருடல் அக்கினியுடன் சங்கமிக்கும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. ஆறுமுகம்
(கணவர் – முன்னாள் மன்னார் மேலதிக அரசாங்க அதிபர்)

102 (32), பலாலிவீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம் (38593)

## யோசப் மரியதாஸ் (ராசு)

குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பாஷையூரை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய யோசப் மரியதாஸ் (ராசு) 18 – 9 – 95 அன்று காலமானார். இவர் டெய்சியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்ரனி, மனோகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அனிற்றா, இமாக்குலேற்றா, பிரசாந்தி, ஜொபித்தா, அலெக்ஸ் றெஜினோல்ட் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19 – 9 – 95) பி. ப. 3.30 மணிக்கு நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ம. டெய்சி
(மனைவி)

கடற்கரை வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம். (38598)

## திருமதி கிறகோறி பிரகாசம்

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் பங்கைச் சேர்ந்த திருமதி கிறகோறி பிரகாசம் காலமாகிவிட்டார்.

இவர் கிறகோறியின் அன்பு மனைவியும், யேசுராஜன் (ஆசிரியர், சென். யேம்ஸ் ம.வி.], லூர்த்தம்மா [பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவமலர், திருஞானபாக்கியம் ஆகியோரின் அன்பு மாமியாரும், யூலி ஆன் (ஆசிரியை, கனகரத்தினம் ம.ம.வி ] கிருபாகரன் [பிரான்ஸ்], யசினா [யாழ்.மாநகரசபை], பிரபாகரன் (ஆசிரியர், கோப்பாய் ம. வி.], டெய்சியானா [ஆசிரியை, சென் பெனடிக்ற் வித்தியாலயம்], கிறிஸ்ரின் யோகினி [திருக்குடும்பக் கன்னியர் மடம்], றொக்சி [பிரான்ஸ்), ராஜி [பிரான்ஸ்], ஆப்ஸ்ரோம் [பிரான்ஸ்], கில்பேட் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [19 – 09 – 1995] பிற்பகல் 3 மணிக்கு, 60, ஆசீர்வாதப்பர் வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
கி. யேசுராஜன் (மகன்)

[38601)

## புலிகளின் குரல் வானொலியில்

செவ்வாய் இரவு
19 – 09 – 1995

★ 8-02 — தியாகி லெப். கேணல் திலீபனின் 8 ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — "மக்களை நேசித்தாய் மலைபோல் உயர்ந்தாய்"
★ 8-20 — நலந்தானா? — மருந்துகள் என்பன பிரயோசனமான நஞ்சுகள் பற்றிய வைத்தியக் குறிப்புகள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கருத்துக்களம் — இ. இராஜேஸ்வரன் எழுதிய "தேடுதல்"
★ 8-50 — மலரும் மொட்டும்

புதன் காலை
20 – 09 – 1995

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து நீங்கள் கேட்டவை

## தமிழீழ வானொலியில்

செவ்வாய் மாலை

★ 5-01 — சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — தமிழிசை
★ 5-30 — வானொலி மதியூகம் — 36
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — என் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — இவ்வாரம் இவர்

## என். டி. ரி கற்கை நெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், செப். 19

மொரட்டுவைப் பல்கலைக்கழகம் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (என். டி. ரி) கற்கைநெறிக்கான விண்ணப்பங்களைக் கோரி உள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி ஒக்ரோபர் 6 ஆகும்.

இது தொடர்பான விபரங்கள் ஆகஸ்ட்மாத வர்த்தமானியில் பிரசுரமாகி இருப்பதாக மொரட்டுவைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றம் அறிவித்துள்ளது. (இ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 19

"மாவட்ட நிர்வாகப் பின்னணியில் மாவட்டத் திட்டமிடல் பணிமனைகளின் தோற்றம் — வளர்ச்சி — பணிகள்" என்ற விடயம் தொடர்பாக நாளை புதன்கிழமை பி. ப. 2-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ்ப்பாண மாவட்டத் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. வி. செ. சுவாமிநாதன் கருத்துரை வழங்குவார்.

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றம் இக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது.

## சிலிப்பர் கட்டைகள் எரிப்பு

ஏறாவூருக்கும் வாழைச்சேனைக்கும் இடையேயுள்ள தேவாபுரத்தில் ரயில் தண்டவாளத்தின் சிலிப்பர் கட்டைகள் இனந்தெரியாதோரால் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன. சுமார் 32 சிலிப்பர் கட்டைகள் எரிக்கப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்தனர். (இ)

## பெற்றோருக்கு அழைப்பு

சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையை இடம் மாற்றுவது தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக நாளை புதன்கிழமை பி.ப 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் பெற்றோரை ஒன்று கூடுமாறு அதிபர் கணேசராஜா கேட்டுள்ளார்.

தகவல்:
க. சிவன்சேய்

(38596)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் க. சிதம்பரப்பிள்ளை

(ஸ்தாபகர் சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை நெல்லியடி)

22 – 08 – 95 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், வர்த்தகப் பெருமக்கள் அரச அலுவலர்கள் லயன் கழகத்தினர், அனுதாபச் செய்தியை அச்சிட்டு வெளியிட்டோர் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நாளை 20 – 09 – 95 புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

— குடும்பத்தினர்.

அம்பம் ஆஸ்பத்திரியடி,
கரவெட்டி. (38590)

## கண்ணீர் அஞ்சலி

அச்செழுவைப் புகுந்த இடமாகக் கொண்டதனால் அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையில் புகுந்து ஆசிரியத் தொண்டாற்றி, அறிவுச் சுடரேற்றி அனைவரது இதயங்களிலும் அழியா இடம்பெற்ற ஆசிரியை

### திருமதி மகேஸ்வரி தெய்வேந்திரம்

நேற்று [18 – 09 – 1995] மரணமான செய்தி கேட்டு ஆறாத்துயரடைகின்றோம்.

அன்னாருக்கு எமது இதயபூர்வமான அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.

யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை,
நீர்வேலி. [38599]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### வைத்திலிங்கம் சோமசுந்தரம்

பிறப்பு: 24 - 07 - 1928
இறப்பு: 30 - 09 - 1994

திதி:- 19 - 09 - 1995

ஆண்டு ஒன்று ஆனாலும் எமது அன்பு நினைவுகள் எம் நெஞ்சங்களை விட்டு அகலா. உங்கள் ஆத்மா சாந்தியடைய அம்பாளை வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்

"கொய்யாத்தோட்டம்"
இருபாலை கிழக்கு,
இருபாலை. (38594)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392 இல் உள்ள அச்சகத்தில் 19 - 09 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org